DEREK PRINCE
MINISTRIES-INDIA

இலவச இதழ்!

தேவனோடு உங்கள் நடை

தேவன் வழியை காண்பிக்கிறார் (பாகம் 1)

"ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது..." (மத். 7:14)

கிறிஸ்தவ வாழ்க்கையை இயேசு இங்கு இரண்டு கட்டங்களாக சித்தரித்து காண்பிக்கிறார்: முதலாவது, நாம் நுழைய வேண்டிய இடுக்கமான வாசல், இரண்டாவதாக, நாம் நடக்க வேண்டிய நெருக்கமான பாதை. அந்த "வாசல்" என்பது ஒரு முறை நுழையும் அனுபவமாகும் – இதை வேதம் "இரட்சிக்கப்படுவது" அல்லது "மறு பிறப்பு" என்று அழைக்கிறது. "வழி" என்பது, இந்த பிரவேசிக்கும் அனுபவத்தினால் நாம் கடந்து போகும் ஒரு புதிய ஜீவனை குறிக்கின்றது.

இவ்விரண்டு கட்டங்களையும் தனித்தனியாக பிரிப்பதற்கு விரோதமாக இயேசு இங்கு நம்மை எச்சரிக்கிறார். நெருக்கமான வழிக்குள் நுழையும் ஒரே வாசல் அந்த இடுக்கமான வாசல் தான். இரட்சிக்கப்படாமல், கிறிஸ்தவ வாழ்க்கையை நாம் நடத்த ஆரம்பிக்க முடியாது. மறு பக்கம் அந்த வாசல் வழியாய் நுழைவதின் நோக்கமே அவ்வழியில் நடப்பது தான். வாசலால் நுழைவது மட்டுமல்ல, அவ்வாசல் திறக்கும் வழியில் நடப்பதினாலும் தான் இயேசு அளிக்கும் பரிபூரண ஜீவனை நாம் அடைய முடியும்.

வழி

கிறிஸ்தவ வாழ்க்கையை "இரட்சிக்கப்படுவது" அல்லது "கிறிஸ்தவனாக இருப்பது" என்கிற ஒரு முன்னேற்றம் இல்லாத நிலையாக நாம் கருதக்கூடாது. சபையின் ஆரம்ப காலங்களில், "கிறிஸ்தவம்" என்கிற வார்த்தை இன்னும் உருவாக்கப்படாதிருந்த நிலையில், "கிறிஸ்தவம்" என்று நாம் இன்று அழைக்கிற காரியம், அன்று "மார்க்கம்" அல்லது "வழி" என்று அழைக்கப்பட்டது. தர்சு பட்டணத்தானாகிய சவுல், தமஸ்குவுக்கு புறப்பட்ட போது, "*இந்த மார்க்கத்தாராகிய புருஷனையாகிலும் ஸ்திரியையாகிலும் தாம் கண்டுப்பிடித்தால், அவர்களை கட்டி எருசலேமுக்கு கொண்டு வரும் படி...*" தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு கடிதங்களை கேட்டு வாங்கினான் (அப். 9:2). பிறகு, பவுல் எபேசுவில் சில காலம் பிரசங்கம் பண்ணின பின்பு, அதின் விளைவுகளை குறித்து இரண்டு வாக்கியங்களை வாசிக்கிறோம்: "சிலர் கடினப்பட்டு, அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது" மற்றும், "அக்காலத்திலே இந்த மார்க்கத்தைக் குறித்துப் பெரிய கலகம் உண்டாயிற்று" (அப். 19:9, 23). (கிறிஸ்தவம், "மார்க்கம்" என்று அழைக்கப்படுகின்ற மற்ற சந்தர்ப்பங்களுக்கு அப். 22:4, 24:14, 22ஐ பார்க்கவும்.)

வேதத்தின் இன்னும் பல பகுதிகளில் இதே கருத்து முன் வைக்கப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு, பவுல், அத்தேனே பட்டணத்தாரை பார்த்து, "அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்" என்று கூறுகிறார் (அப். 17:28). அவருக்குள் நாம் "பிழைத்தால்," நாம் "அசைவோம்." ஜீவன் ஒருபோதும் முன்னேற்றமற்றதாகவோ, அசைவற்றதாகவோ இருப்பது இல்லை. அது எப்போதுமே வளர்ச்சி, அசைவு, விருத்தி மற்றும் முன்னேற்றத்தை குறிக்கின்றது. "நீதிமான்களுடைய பாதை நடுப்பகலவரைக்கும் அதிகமதிகமாய்ப்

THE TEACHING LEGACY OF DEREK PRINCE
DEREK PRINCE MINISTRIES - INDIA
www.derekprince.in

பிரகாசிக்கிற சூரியப்பிரகாசம்போலிருக்கும்" என்று நீதி.4:18 கூறுகிறது. கிறிஸ்தவ வாழ்க்கையின் இப்பாதையில் நாம் தொடர்ந்து ஒரு பூரண வெளிச்சத்தை நோக்கி முன்னேறுகிறோம். நேற்றைய தினத்தின் வெளிச்சம் இன்றைய தினத்திற்கு ஒருபோதும் போதுமான தாய் இராது. அசைவில்லாது நிற்பதற்கோ, பின்னிட்டு திரும்புவதற்கோ இடமே இல்லை. கடந்த காலம் எவ்வளவு பிரகாசமாய் இருந்திருந்தாலும், வருங்காலம் அதிக பிரகாசமுடையதாயிருக்கிறது.

இப்படி கிறிஸ்தவ பாதையில் தொடர்ந்து முன்னேற வேண்டும் என்ற சவால் கடினமாகவும், சிரமமானதாயும் தோன்றுகிறதா? உங்களுக்கு நான் ஒரு ஆசீர்வாத உறுதிமொழியை கொடுக்கிறேன்: இப்பாதையில் நாம் ஒருபோதும் தனித்து நடக்க அழைக்கப்படுவதில்லை. நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும், தேவன் தாமே நம்மோடு இருப்பார். பழைய உடன்படிக்கையின் கீழ், "பயப்படாதே நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னை பலப்படுத்தி உனக்கு சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னை தாங்குவேன்" (ஏசா. 41:10) என்ற வாக்குதத்தத்தை தேவன் தம்முடைய ஜனங்களுக்கு கொடுத்தார். புதிய உடன்படிக்கையின் கீழ், இவ்வாக்குத்தத்தம் கிறிஸ்துவால் நமக்கு உறுதி செய்யப் படுகிறது: "உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்" (மத். 28:20).

இருவர் ஒருமித்து நடக்க கூடுமோ?

அப்படியானால் நாம் தேவனோடு நடைப்போட கற்றுக்கொள்ள வேண்டும். அவரோடு தொடரும் ஒரு தனிப்பட்ட உறவு என்பது, இதன் அர்த்தமாகும். ஆமோஸ் 3:3ல், "இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ?" என்ற கேள்வி முன்வைக்கப்பட்டுள்ளது. இதன் பதில் "இல்லை" என்பதாகும். தேவனோடு நடை போட நாம் அவரோடு "ஒருமனப்பட்டிருக்க" வேண்டும்.

ஆனால் சுபாவத்தின் படி பார்த்தால், நாம் தேவனோடு ஒத்துபோவதில்லை. மாறாக, ரோமர் 8:7ல், "மாம்ச சிந்தை, தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது" என்று பவுல் கூறுகிறார். "மாம்ச சிந்தை" என்பது, தேவனுடைய கிருபை நம்மை மாற்ற ஆரம்பிக்கும் முன், நமக்கு இருக்கும் சிந்தைகள் மற்றும் மனநிலைகளை குறிக்கின்றது. இவைகள் தேவனுக்கு நேர் விரோதமானவைகளான படியால், ஒப்புரவாகுதல் சாத்தியமில்லை.

ஏசாயா 55:8-9ல், தேவன் தெளிவாக "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல.....பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளை பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளை பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது" என்று கூறுகிறார். மேலும் தேவன் மாற மாட்டார். மல்கியா 3:6ல், "நான் கர்த்தர், நான் மாறாதவர்" என்று கூறுகிறார்.

தேவனுடைய வழிகளும் சிந்தைகளும் நம்முடையவற்றிற்கு மிகவும் வித்தியாசமாக இருப்பதினாலும், தேவன் மாறமாட்டார் என்பதினாலும், ஒரே வழி தான் மீதம் இருக்கிறது. நாம் தேவனோடு நடை போட வேண்டுமானால், நாம் தான் மாற வேண்டும்: "துன்மார்க்கன் தன் வழியையும், அக்கிரமக்காரன் தன் நினைவுகளையும் விட்டு....திரும்புவானாக" (ஏசா. 55:7). நம்முடைய வழிகளும் சிந்தைகளும் தான் மாற்றமடைய வேண்டும். இம்மாற்றம் நடைபெற நம்மை முழுவதுமாக நாம் தேவனுக்கு அர்ப்பணிக்க வேண்டும்.

யாருக்கு சொந்தம்?

ரோமரின் முதல் பதினோரு அதிகாரங்களில், நம்முடைய மீட்பிற்கு தேவன் ஏற்படுத்திய முழு திட்டமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பின்பு 12ம் அதிகாரத்தை, "அப்படியிருக்க சகோதரரே ...... தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று அந்த அதிகாரத்தை அவர் துவக்குகிறார். "அப்படியிருக்க" என்பதற்கு என்ன அர்த்தம்? தேவன் நமக்கு செய்த எல்லாவற்றின் வெளிச்சத்திலும், அவர் நம்மிடத்தில் எதிர்பார்க்கும் விளைவை குறிக்கின்றது. அந்த விளைவு என்ன? பின் வரும் வார்த்தைகளில் அது அடங்கியிருக்கிறது: "....நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்கு பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கொத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினால் மறுரூபமாகுங்கள்."

இங்கு பவுல் விவாதிக்கும் அடிப்படை விஷயம் "உரிமை" ஆகும். கிறிஸ்தவர்களாகிய நாம் இனி நம் மீது உரிமை கோரிக்கொள்ள முடியாது. "உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். (1 கொரிந்தியர் 6:19-20). நமக்காக செலுத்தப்பட்ட "கிரயம்" என்னவென்றால், அது "கிறிஸ்துவின் விலையேற பெற்ற இரத்தம். இவ்வளவு உயர்வான விலைக்கு தேவன் நம்மை கொண்டதினால், நாம் நமக்கு இனி சொந்தமல்ல, அவருக்கே சொந்தமாயிருக்கிறோம்.

சட்டப்பூர்வமாக நம்முடைய வாழ்க்கையின் உரிமை, தேவனுடையதாயிருந்தாலும், நம்முடைய சுய சித்தத்திற்கு விரோதமாக, அவர் தம்முடைய உரிமையை கோர மாட்டார். மாறாக, அவருடைய உரிமையின் நியாயத்தை நாம் உணர்ந்து, நம்முடைய சரீரங்களை ஜீவ பலியாக நாம் ஒப்புக்கொடுக்கும் வரை அவர் காத்திருக்கிறார். "ஜீவ" என்கிற வார்த்தை பழைய உடன்படிக்கையின் பலிகளுக்கும், புதிய ஏற்பாட்டின் பலிகளுக்கும் உள்ள வித்தியாசத்தை முன் வைக்கிறது. பழைய உடன்படிக்கையின் கீழ், தேவனுக்கு பலியாக செலுத்தப்பட்ட மிருகங்கள் கொல்லப்பட்டு படைக்கப்பட்டன. ஆனால் புதிய உடன்படிக்கையின் கீழ், நம்முடைய சரீரங்களை நாம் இன்னும் ஜீவனுள்ளதாய் படைக்கிறோம். ஆனால், மற்ற எல்லா விதத்திலும், தேவனுக்கு நம்முடைய சரீரங்களை நாம் அர்ப்பணிப்பது, பழைய உடன்படிக்கையின் பலிகளைப்போலவே, முழுமையாகவும், இறுதியாகவும் இருக்கிறது.

தேவனுக்கு நம்முடைய சரீரங்களை ஒப்புக்கொடுப்பது, ஒரு உறுதியான கெம்பீரமான பரிமாற்றமாய் இருக்க வேண்டும். அதை நாம் ஜெபத்தில் இப்படி கூறலாம்:

"ஆண்டவரே, என்னை பாவத்திலிருந்து மீட்டெடுப்பதற்காக நீர் செலுத்தின கிரயத்தை காணும் போது, நான் இனி எனக்கு சொந்தமல்ல, உமக்கே சொந்தமென்று காண்கிறேன். ஆகையால் நான் இப்போது என்னை உமக்கு அர்ப்பணிக்கிறேன் - என் சரீரமும் அதிலுள்ள யாவும் - உமக்கு ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்கிறேன். இந்த நிமிடம் துவங்கி நீர் என் வாழ்வின் முழு உரிமையையும், கட்டுப்பாட்டையும் எடுத்துக்கொள்ள வேண்டுகிறேன், நம்புகிறேன். இயேசுவின் நாமத்தில், ஆமென்."

மனம் புதிதாகிறது...

இப்படி, ஒருமுறை நாம் தேவனுடைய உரிமையை ஒப்புக்கொள்ளும்போது, நம்முடைய வழிகளிலும், சிந்தைகளிலும் தேவையான மாற்றங்களை அவர் கொண்டு வர நாம் வழியை உண்டாக்கிவிட்டோம். இப்போது, "நம்முடைய மனது புதிதாக்கப்படுவதை" நாம் அனுபவிக்க ஆரம்பிக்கிறோம். அப்படியே, நம்முடைய மனம் புதிதாகும்போது, நாம் "தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று (அனுபவத்தில்) பகுத்தறிய" ஆரம்பிக்கிறோம். நம்முடைய பழைய, புதிதாக்கப்படாத மனது, "தேவனுக்கு விரோதமான பகை" என்று நாம் ஏற்கெனவே கண்டறிந்தோம். தேவன் தம்மை பகைத்து நிற்கும் இந்த மனதிற்கு, நம்முடைய வாழ்விற்கான திட்டத்தை ஒருபோதும் வெளிப்படுத்த மாட்டார். ஆனால் நம்முடைய மனது நாளுக்கு நாள் புதிதாக்கப்பட்டு, தேவனோடொத்திருக்க பயிற்றுவிக்கப்படும்போது, நாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து, அவருடைய வழியில் நடக்க திராணியுள்ளவர்களாக மாறுகிறோம்.

நம்முடைய மனதை புதிதாக்கும் செயல்தொடர் நம்முடைய வாழ்வின் மூன்று முக்கிய பகுதிகளை பாதிக்கிறது: நாம் பின்தொடரும் *குறிக்கோள்கள்*, அவைகளை பின்தொடருவதற்கான *நோக்கங்கள்*, மற்றும் அவைகளை அடைய நாம் பயன்படுத்தும் *வழிமுறைகள்*. சுபாவத்தின்படி நாம் அனைவருமே சுயத்தையே மையமாக கொண்டவர்கள். ஒரு தீர்மானத்தை நாம் எப்போது எதிர்கொண்டாலும், நம்மிடம் நாமே கேட்கும் கேள்விகள் இவைதான்: இது என்னை எப்படி பாதிக்கும்? இதிலிருந்து எனக்கு என்ன கிடைக்கும்? நான் விரும்பும் விளைவை நான் எப்படி பெற முடியும்? நம்முடைய வாழ்வின் கட்டுப்பாட்டை நாம் துறந்து, கிறிஸ்துவின் ஆளுகைக்கு விட்டுக்கொடுக்கும்போது, இவையனைத்தும் மாற ஆரம்பிக்கிறது.

மத்தேயு 6:9-13ல், இயேசுவின் மாதிரி ஜெபத்திலிருந்து, வாழ்விற்கான *குறிக்கோள்*, "உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக," *நோக்கம்* "தேவனுடைய...மகிமைக்காக என்றென்றும்" என்று கற்றுக்கொள்கிறோம். *குறிக்கோள்* மற்றும் *நோக்கம்* என்பவை தீர்மானம் செய்யப்பட்டால், *வழிமுறையை* நாம் எதிர்கொள்கிறோம்: தேவனுடைய இராஜ்ஜியம் மற்றும் தேவனுடைய மகிமையை நான் முன்னேற்ற, எப்படி வாழ முடியும்?

வேதம் கற்றுக்கொடுக்கிறது, நம்முடைய அனுபவமும் உறுதி செய்கிறது என்னவென்றால் நம்முடைய சுயமுயற்சியோ, திறமையோ போதாது. மேலான வல்லமை நமக்கு அவசியம். சகரியா 4:6ல் இதற்கான வழியை தேவன் வைத்திருக்கிறார்: "பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தாலும் அல்ல (சுய பெலன் அல்லது மனோபலமோ அல்ல), என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் கூறுகிறார்." பரிசுத்த ஆவியின் வல்லமை ஒன்று தான் போதுமானது.

விசுவாசத்தினால் நடை போடுவது

மனித சரித்திரத்தின் ஆரம்ப காலங்களில், தேவனோடு நடைபோட கற்றுக்கொண்ட ஒரு மனிதனின் சித்திரத்தை காண்கிறோம்: "ஏனோக்கு தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருக்கையில், காணப்படாமற்போனான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டார்" (ஆதி. 5:24.) தேவனோடு இந்த தொடர் நடையில், ஏனோக்கு தேவனோடு மிகவும் அந்தரங்க உறவை ஏற்படுத்திக் கொண்டபடியால், இறுதியில் தன்னுடைய உலக வீட்டிற்கு திரும்புவதைக் காட்டிலும், தேவனோடு முறிக்கப்படாத ஐக்கியத்தை தக்கவைத்துக்கொள்வது, இயல்பாக மாறியது.

எபிரெயர் 11:5-6, தேவனோடு ஏனோக்கின் நடையின் இரகசியத்தை வெளிப்படுத்துகிறது: "விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தை காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான்; தேவன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே, அவன் காணப்படாமற்போனான்; அவன் தேவனுக்குப் பிரியமான வனென்று அவன் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்னமே சாட்சிபெற்றான். விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்." முக்கியப்படுத்தி காண்பிக்க, இதில் இருமுறை கூறப்பட்டிருக்கும் வார்த்தை, விசுவாசம். தேவனை பிரியப்படுத்தும் ஒரு நடையை அவருடன் பெற, விசுவாசம் அத்தியாவசிய, அடிப்படை தேவையாக இருக்கிறது.

விசுவாசம் என்றால் என்ன? எபிரெயர் 11:1 கூறுகிறது: "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." நம்முடைய இயற்கையான புலன்களுக்கு வெளிப்படுத்தப் படாத காரியங்களை நாம் பகுத்தறிய, விசுவாசம் நமக்கு அளிக்கப்படும் ஒரு ஆவிக்குரிய "புலன்." இரண்டு காணப்படாத உண்மைகளுடன் இது நம்மை இணைக்கிறது: தேவன் மற்றும் தேவனுடைய வார்த்தை.

கிறிஸ்தவர்களாக, நாம், "தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்" என்று பவுல் கூறுகிறார் (2 கொரிந்தியர் 5:7). பொதுவாக காண்பது புலன் அறிவை குறிக்கும். இது விசுவாசத்துக்கு எதிர்மறையாக இங்கு காண்பிக்கப்பட்டுள்ளது. விசுவாசம் புலன்களிலுள்ள விசுவாசத்தை துறந்து விடுகிறது. புலன்களில் நம்பிக்கை வைத்தல், விசுவாசத்தை தள்ளி விடுகிறது. ஆகையால் நாம் ஒவ்வொருவரும் ஒரு கேள்வியை எதிர்கொள்கிறோம்: எனக்கு எது அதிக உண்மையாய் தோன்றுகிறது -

இன்னும் தேவையா ?

- ◯ ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும் - - - - - - பிரதிகள் தேவை.
- ◯ தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- ◯ முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்

ISSUE #002

பதிவு செய்க !

- ◯ தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.
- ◯ ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- ◯ கடிதம் மூலமாக அனுப்பவும்.

See over for address details...

தேவனும் அவருடைய வார்த்தையுமா அல்லது என் ஆத்துமாவுக்கடுத்த அபிப்பிராயங்களும் புலன் அறிவுமா?

உண்மையான, அசைவில்லாத விசுவாசம், தேவனுடைய வார்த்தையை பற்றிக்கொண்டு, தேவனுடைய வார்த்தையுடன் ஒத்துப்போகாத புலன்களின் அபிப்பிராயங்களை நிராகரிக்கிறது. இத்தகைய விசுவாசத்தின் மிகப்பெரிய வேதாகம முன்னுதாரணம் ஆபிரகாம். "விசுவாசிக்கிறவர்களின் தகப்பன்" என்று ஆபிரகாம் அழைக்கப்படுகிறார். "நம்முடைய விசுவாச தகப்பனின் அடிச்சுவடுகளை பின்பற்ற" (ரோமர் 4:12) நமக்கு ஒரு சவால் முன்வைக்கப்பட்டுள்ளது. பவுல் பயன்படுத்தும் மொழி, கிறிஸ்தவ வாழ்க்கையை குறித்து முன்பு சொன்னதையே உறுதி செய்கிறது. அது ஒரே நிலையில் நிற்பது அல்ல, ஒவ்வொரு விசுவாசத்தின் அடிச்சுவடுகளை நாம் எடுத்து வைப்பதின் மூலம் முன்னேறும் ஒரு "நடை" யாகும்.

விசுவாசத்தில் நடைப்போடுவது எப்படி?

ரோமர் 4:17-21ல், ஆபிரகாம் விசுவாசத்தில் நடந்ததின் குறிப்பிட்ட உதாரணத்தை பவுல் கூறினார். ஆபிரகாமும் சாராளும் ஒரு பெரிய தேசத்தின் தகப்பனாக மாறப்போகும் ஒரு பிள்ளையை பெற்றெடுப்பார்கள் என தேவன் வாக்களித்தார். ஆனால் இருவரும் இது சாத்தியமாகக்கூடாத வயதை எட்டினார்; பிள்ளையும் வரவில்லை. தேவன் வாக்களித்ததற்கும் தங்கள் சரீரங்களின் இயலாமையை குறித்து புலன்கள் கூறியதற்கும் இடையில் ஏற்பட்ட மோதலில், ஆபிரகாம் தேவனுடைய வாக்குத்தத்தத்தையே பற்றிக் கொள்ள தீர்மானித்தார். (ரோமர் 4:20-21).

இந்த விசுவாச நடையில், நாம் ஒரே நேரத்தில் இரு உலகங்களோடு தொடர்பில் உள்ளோம். நம்முடைய புலன்களினால் இயற்கையான, சரீரப்பிரகாரமான உலகத்தோடு தொடர்பிலும், நம்முடைய விசுவாசத்தினால் தேவன் மற்றும் அவருடைய வார்த்தையின் காணப்படாத, நித்திய உலகத்தோடு தொடர்பில் உள்ளோம். 2 கொரி. 4:18ல் பவுல் இவ்விரு உலகங்களையும் வேறுபடுத்தி காண்பிக்கிறார். உபத்திரவங்களின் வழியாய் கூட தேவனுடைய நோக்கங்கள் நம்முடைய வாழ்க்கையில் செயல்படுகின்றன என்று கூறுகிறார். "காணப்படுகிறவைகளை அல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு..." அங்கே பயன்படுத்தப்படும் வார்த்தைகளில் வேண்டுமென்றே முரண்பாடு இருக்கிறது. காணப்படாதவைகளை நாம் எப்படி காண முடியும்? விசுவாசத்தின் மூலம், விசுவாசம், காணப்படாத நித்திய உலகத்தின் உண்மைகளை நாம் பகுத்தறிய உதவும் ஆவிக்குரிய "புலனாய்" இருக்கிறது. நம்முடைய புலன்கள் அளிக்கும் ஆதாரத்தை சரியாக மதிப்பிடுவது மிக முக்கியமானது. நம்மை சுற்றிலும் சரீரப்பிரகாரமான பொருட்களின் உலகமே இல்லாதது போல், நம் கண்களையும் காதுகளையும் அடைத்துக் கொண்டு நடக்க தேவன் சொல்லவில்லை. விசுவாசம் கற்பனை உலகமல்ல. நம்முடைய புலன்கள் காண்பிக்கும் உண்மையை நாம் கேள்வி கேட்கவில்லை ஆனால் அது தான் முடிவா என்பதை நாம் தட்டி கேட்கிறோம்.

ஆபிரகாம் இதற்கு பிழையற்ற உதாரணம். அவனுடைய புலன்கள் பிள்ளை பெற முடியாது என்று கூறின. ஆனால் தேவன் அவனுக்கு குமாரனை வாக்குத்தத்தம் செய்திருந்தார். தன் புலன்கள் வெளிப்படுத்தியது தவறு என்பது போல் ஆபிரகாம் நடிக்கவில்லை. ஆனால் அது தான் இறுதி முடிவு என்றும் அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. தேவனுடைய வாக்குத்தத்தத்தை புலன்கள் சந்தேகிக்க வைக்க இடம் கொடாமல் அவன் தேவனுடைய வாக்குத்தத்தை உறுதியாக பற்றிக் கொண்டான். இறுதியாக அவன் விசுவாசம் சோதிக்கப்பட்ட பின், அவன் சரீரத்தின் நிலை, தேவனுடைய வார்த்தையுடன் ஒத்துப்போக கொண்டு வரப்பட்டது. அவன் ஒரு பிள்ளையை பெற்றெடுக்கக்கூடிய சரீர நிலையை அடைந்தான்.

விசுவாசம் தாழ்மையுடன் இணைந்தது, ரோமர் 3:27ல் விசுவாச பிரமாணத்தால் பெருமைப்பாராட்டுவது தவிர்க்கப்பட்டிருக்கிறதென்று கூறுகிறார். ஆபகூக் 2:4ல் பெருமை பாராட்டும் தன்னம்பிக்கையும், தாழ்மையான விசுவாசமும் எதிரிடையானவைகள், ஒன்றை ஒன்று தவிர்க்கும் காரியங்களாகவும் காண்பிக்கப்பட்டுள்ளன. "அகங்காரியின் ஆத்துமா அவனுக்குள் செம்மையானது அல்ல; விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்று கூறப்பட்டுள்ளது. தன் இயற்கை திறமை மற்றும் புலன் அறிவை சார்ந்திருக்கும் மனிதன் அகங்காரி என்று அழைக்கப்படுகிறான். நீதிமான் என்பவன், ஆபிரகாமை போல தன் சுய திறமையிலுள்ள நம்பிக்கை மற்றும் புலன்கள் வெளிப்படுத்தும் காரியங்களிலுள்ள நம்பிக்கையை துறக்கிறவன். அவன் காணப்படாத, ஆனால் நித்திய தேவன் மற்றும் அவருடைய வார்த்தை - என்கிற உண்மைகளில் நம்பிக்கை வைக்க முடிவு செய்கிறான்.

மீகா 6:8ல், தேவனோடு நடைப்போட, தாழ்மை நாம் எடுக்க வேண்டிய தீர்மானம் என்று கூறப்பட்டுள்ளது. "உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதையல்லாமல்" என்று கூறப்பட்டிருக்கும் சொற்றொடர், மூல எபிரெயத்தை சரியாக பிரதிபலிக்கிறது. நாம் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய ஒரு தீர்மானம்: "ஆண்டவரே என் திறமை மற்றும் புலன் அறிவை நிராகரிக்கிறேன். உம்மையும் உம்முடைய வார்த்தையையும் நம்ப தீர்மானிக்கிறேன்" உம்முடைய கிருபையால் நான் தரிசித்து அல்ல, விசுவாசித்து நடப்பேன். சுய-தாழ்மையின் இந்த மனநிலை மற்றும் தேவனை சார்ந்துக்கொள்ளுதல், தேவனோடு தொடரும் ஒரு நெருக்கமான நடைக்கு வழியை திறக்கிறது.

உங்கள் விபரம்

பெயர் ....

விலாசம்: ....

....

தொலைபேசி: .... பின்கோடு: ....

இமெயில்: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை ₹

Derek Prince
Ministries - India
Contact us
www.derekprince.in
admin@derekprince.in
Ph 9585538205
1-C EVR Road,
3rd Floor,(Opp.
Chinthamani Mall),
Puthur, Trichy - 620017

www.derekprince.in

DEREK PRINCE MINISTRIES - INDIA